# நான் ஒரு பிரசங்கி அல்ல



வில்லியம் மரியன் பிரன்ஹாம்

*செய்தி:* **தேவன் மோசேயிடம் பேசினார்,**
ஆகஸ்டு 31, 1953, சிகாகோ, இல்லினாய்ஸ், அமெரிக்கா

12. இப்பொழுது, நாம் சற்றே வார்த்தையின் பேரில் பேசுவோம். கர்த்தருக்குச் சித்தமானால், இங்கே யாத்திராகமம் 23ம் அதிகாரத்தில் காணும் ஒரு சிறிய பொருளை எடுத்து, அதை உபயோகிக்க விரும்புகிறேன்.

இப்பொழுது, வேதாகமத்தைப் போதிக்கும் ஒரு-ஒரு போதகராக இருப்பதற்கு மிகவும் எளிய மாதிரியாகவே நான் இருக்கிறேன். சகோதரன் எர்ன் பாக்ஸ்டரும், சகோதரன் போஸ் அவர்களும், அவர்கள் உண்மையாகவே கல்விமான்களாக இங்கேயிருக்கிறார்கள், நான் வார்த்தையை விளக்கிக் கூற முயற்சிப்பதற்கும், பிரசங்கம் பண்ண முயற்சிக்கவும் மிகவும் அற்பமானவனாகவே உணருகிறேன், நான் ஒரு பிரசங்கி அல்ல. ஆரம்பத்திலேயே, நான் எப்போதுமே ஒரு உபரி சக்கரம் (spare tire) என்று சொன்னேன் என்று நினைக்கிறேன். உங்களிடம் காற்று வெளியேறின ஒரு சக்கரம் இருக்கும் போது மாத்திரமே அவைகளை

உபயோகிப்பீர்கள். ஆனால் இன்றிரவு காற்று வெளியேறின எந்த டயரும் (flat) நம்மிடம் இல்லை. நம்மிடம் ஏராளமான புத்திசாலிகள் இருக்கிறார்கள், ஆனால் நாம் ஒருக்கால் சற்றே இந்த உதிரி டயரை உருட்டுவோம். நீங்கள் ஜெபித்துக்கொள்ளுங்கள்.

★★★★★

*(குறிப்பு: இந்தச் செய்தியின் இறுதித் திருத்தம் இன்னும் முடியவில்லை. இது புத்தகமாக அச்சிடும் போது, இறுதி திருத்தம் செய்து வெளிவரும்.)*

★★★★★